செய்தி வெளியீடு எண். 155 நாள்: 16.03.2017

**திருவள்ளுர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**
**மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது**

~~~~~

திருவள்ளுர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகிற **24.03.2017** அன்று **வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு** திருவள்ளுர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் திருவள்ளுர் மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வருவாய்த்துறை, மின்வாரியம், கூட்டுறவுத்துறை, பொதுப்பணித்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, மீன்வளத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காணவுள்ளனர்.

எனவே இம்மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என திருவள்ளுர் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளுர்**
~~~~~

அனுப்புநர்

திருசுரேஷ் ஜோ குமார் பிரைட் பி,எஸ்ஸி(வே)
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வேளாண்மை)
திருவள்ளூர்

பெறுநர்

செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்
திருவள்ளூர்

எண் ப. வெ. 01/17 வேளா. நாள் 16.03.2017

அய்யா,

பொருள் வேளாண்மை – விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்- **24.03.2017** அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறுவது – செய்தியினை பத்திரிகையில் வெளியிட கோருதல் - குறித்து

----

விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் **24.03.2017** அன்று வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதால், அது சம்பந்தமான இத்துடன் இணைக்கப்பட்டுள்ள செய்தியினை பத்திரிகையில் வெளியிட ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்
(வேளாண்மை) திருவள்ளூர்